முருகப்பெருமான் துணை

**மகான் ஞானசித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.11.2022**, செவ்வாய்கிழமை

1. வரம் தரும் ஞான வள்ளலே
வையகம் காத்திடும் அண்ணலே
அறமாக சக்திபல தந்திடும்
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது தேள்திங்கள்
குறைவிலா முன்னான்கோர்திகதி குசன்வாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 13 ம் நாள் 29.11.2022, செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு ஞானச்சித்தர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை வழி காட்டும் தரும
ஞான வழிகளை ஏற்றுவிட
நானிலத்தில் அரங்கன் அருளாசி
4. அருளாசி பெருந்துணைஆகி
அகிலம் மாற்றம்தனை தருகின்ற
அருள்பலம் ஞானபலம் ஆகி
அகிலத்தில் சக்திநிலை கூடும்
5. கூடவே தரும பலம் பெருகும்
குவலயமாக மாற்றம் கண்டு
நாடெங்கிலும் ஞானவான்கள்
ஞானதேசிகனால் உருவாகி
6. ஆகியே மாற்றம் சடுதி
அகிலமே கண்டடைய நேரும்
மகிழவே அரங்கமகான் அவதார
மகிமை உணர்ந்து வருக
7. வருகவே ஞானிகள் வெளிப்பாடு
வையகம் எங்கிலும் பரவி
முருகப்பெருமானின் தலைமையை
முழுமை ஞானமாக உலக மக்கள்
8. உலகமக்கள் அடைந்துதேறியே
உயர்வான சமூகம் படைத்து
கலகம் பிறவகை இன்னலிலா
கண்ணியமான வாழ்வும் வளமும்
9. வளமும் ஞான பலமுமாக
வாழ்வில் கண்டு தேறியே
சலனம் மாயை யாவும் கடந்து
சகலரும் ஞானி ஆக நேரும்

10. நேருமை கொண்ட மக்களின்
நீதி நெறிதனை ஏற்றுமே
முருகப்பெருமானின் அனுகூலம்
முழுமையாகி உலகமெங்கிலும்

11. உலகமெங்கிலும் ஞான ஆட்சி
உயர்வாய் சடுதி கண்டுமே
உலகமாற்றமாக நிகழும்
உரைத்திட்ட அனுகூல ஆசி முற்றே

–சுபம்–